# தமிழ்மொழியும் இலக்கியமும்

## செயலட்டை 08 இலக்கியத்தொகுப்பு பகுதி III தரம் 10

## குகப்படலம்

01. **கள்ள ஆசையை அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட..**
   அ. கள்ள ஆசை என்பது உணர்த்தும் கருத்து யாது?
   ஆ. பண்டு ஆண்ட என்பதன் கருத்து யாது?

02. **அவனி பண்டு ஆண்ட வேந்தரை இழித்து**
   **மேல் ஏறினான் தானும் ஏறினான் ...**
   அ. இங்கு ஏறினான் எனப்படுபவன் யார்?
   ஆ. ஏறினான் என்பது குறிக்கும் இரு பொருள் யாவை?

03 **குன்று அனைய திருநெடுந் தோள்குகன்**
   **என்பான் இந் நின்ற குரசில்...**
   அ. இங்கு குகனது சிறப்பு யாது?
   ஆ. குரசில் என்பதன் கருத்து யாது?

04. **கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி...**
   அ. இங்கு முதல் தேவி எனப்படுபவர் யார்?
   ஆ. கோக்கள் வைகும் முற்றத்தான் யார்?
   இ. கோக்கள் வைகும் முற்றத்தான் என்பதால் விளக்கப்படுவது யாது?

05. **விலங்கல் திண் தோள் கை வீரக் களிறு அனைய காளை இவன்..**
   அ. விலங்கல் என்பது குறிக்கும் கருத்து யாது?
   ஆ. இவ்வடிகளில் காளை என விளிக்கப்பட்டவன் யார்?
   இ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

06. **கன்றுபிரி காராவின் துயருடைய கொடி வினவ...**
   அ. இங்கு கொடி எனப்படுவது யார்?
   ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணியினை குறிப்பிடுக?

07. **இத் துணைவன் இராகவனுக்கு, இலக்குவற்கும்**
   **இளையவற்கும் எனக்கும் மூத்தான்...**
   அ. இதில் கூறப்படும் இளையவன், மூத்தவன் எனப்படுபவர்கள் யாவர்?
   ஆ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

08. **"கொற்றத்தார் குரசில்" இவர் ஆர்?" என்று**
   அ. இங்கு **"கொற்றத்தார் குரசில்"** என்பது என்ன?இவ்வாறு கூறப்படுவது யாரை?
   ஆ. இவ்வாறு வினவியவர் யார்?

09. **நைவீர் அலீர் மைந்தீர் இனித் துயரால் நாடு இறந்து**
   **காடு நோக்கி மெய் வீரர் பெயர்ந்ததுவும். ..**
   அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   ஆ. மெய் வீரர் என விழிக்கப்படுவர்கள் யாவர்?

10. **மூன்று உலகும் ஈன்றானை முன்ஈன்றானைப்...**
   அ. இங்கு மூன்று உலகும் ஈன்றவன் யார்?
   ஆ. முன் ஈன்றான் எனும் பதம் யாரைக் குறிக்கிறது.

11. **நீவிர் ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்**
**காலம் அளித்திர் என்றான்...**
அ. இக் கூற்றினை உரைத்தது யார்?
ஆ. இங்கு ஐவீர் எனப்படுவோர் யாவர்?

12. **கழல்கால் மைந்தன் நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்**
**தன் மனத்தே நினைந்து செய்யும் கொடுமையால் அளந்தாளை...**
அ. உலகனைத்தையும் நெடுமையால் அளந்தவன் யார்?
ஆ. உலகனைத்தையும் கொடுமையாள் அளந்தது யார்?

13. **யாவர்க்கும் தொழு குலமாம் இராமன் பின்பு**
**பிறந்தானும் உளன் ...**
அ. யாவர்க்கும் தொழுகுலமாக விளங்குபவன் யார்?
ஆ. இராமன் பின்பு பிறந்தான் என இங்கு குறிப்பிடப்படுபவன் யார்?

14. **சுடு மயானத்திடை தன் துணை ஏக**
**தோன்றல் துயர்க் கடலில் ஏக ...**
**கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி ஏக...**
அ. இங்கு சுடுமயானத்திடை ஏகப்பட்ட துணை யார்? தோன்றல் யார்? கருணை ஆர்கலி யார்?
ஆ. இவ்வாறு செய்தவள் யார்?

15. **அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை**
**நோக்கி, ஐய. அன்பின் நிறைந்தாளை உரை ...**
அ. இதில் அயல் நின்றாள் எனக் கருதுவது யாரை?
ஆ. இக் கூற்றினை வினவியது யார்?

16. **படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும்**
**செவிலியை...**
அ. படர் எலாம் படைத்தவள் இங்கு யார்?
ஆ. செவிலி என்பதன் பொருள் யாது?

17. **இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல்**
**இந்நின்றாள் என்னை ஈன்றாள்...**
அ. இக் கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
ஆ. இடர் இலா முகத்தினாள் எனப்படுவது யாரை?

18. **அன்னப் பேடை சிறை இலாது ஆய்க்கரை**
**துன்னிற்று என்னவும் வந்தது தோணியே...**
அ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
ஆ. துன்னிற்று என்பது குறிக்கும் கருத்து யாது?

## ஆ பகுதி

01. **என்றலுமே, அடியின் மிசை நெடிது வீழ்ந்து**
**அழுவானை, "இவன் யார்?" என்று**
**கன்று பிரி கராவின் துயர் உடைய**
**கொடி வினவ, கழல் கால் மைந்தன்**
**"இன் துணைவன் இராகவனுக்கும், இலக்குவற்கும்,**
**இளையவர்க்கும், எனக்கும் மூத்தான்**
**குன்று அனைய திரு நெடும் தோள் குகன்**
**என்பான் இந் நின்ற குரசில் என்றான்**

அ. குகனை பரதன் கோசலைக்கு எவ்வாறு அறிமுகம் செய்கின்றான்? .

ஆ. இப் பாடலில் இடம்பெற்றுள்ள அணியினை விளக்குக? .

02. **"நைவீர் அலீர் மைந்தீர்! இனித் துயரால்**
**நாடு இறந்து காடு நோக்கி**
**மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று**
**ஆம் அன்றே விலங்கல் திண் தோள்**
**கை வீரக் களிறு அனைய காளை இவன்**
**தன்னோடும் கலந்து நீவிர்**
**ஐவீரும் ஒருவீராய் அகல் இடத்தை நெடும்**
**காலம் அளித்திர்" என்றாள்.**

அ. கோசலை ஆறுதல் கூறி, வாழ்த்தும் தன்மையினை குறிப்பிடுக?

ஆ. குகனின் சிறப்பினை எடுத்துரைக்குக?

03. **அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை**
**நோக்கி, "ஐய! அன்பின்**
**நிறைந்தாளை உரை" என்ன, "நெறி திறம்பா**
**தன் மெய்யை நிற்பது ஆக்கி**
**இறந்தான் தன் இளந்தேவி; யாவர்க்கும்**
**தொழு குலமாம் இராமன் பின்பு**
**பிறந்தானும் உளன் என்ன பிரியாதான் தனைப்**
**பயந்த பெரியாள்" என்றான்.**

அ. இப்பாடல் இடம் பெற்ற சந்தர்ப்பம் யாது?

ஆ. சுமித்திரையின் சிறப்புக்கள் யாவை?

இ. இப்பாடலில் கூறப்படும் தசரதனின் சிறப்பு யாது?

04. **சுடு மயானத்திடை தன் துணை ஏக,**
**தோன்றல் துயர்க் கடலில் ஏக,**
**கடுமை ஆர் கானகத்து கருணை ஆர்கலி**
**ஏக, கழல்கால் மைந்தன்**
**நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்**
**தன் மனத்தே நினைந்து செய்யும்**
**கொடுமையால், அளந்தாளை, "ஆர் இவர்?**
**என்றுஉரை" என்ன, குரசில் கூறும்.**

அ. கைகேயியின் கொடுமை எவ்வாறு காட்டப்படுகின்றது?

ஆ. பாடலில் வெளிப்படும் அணியினை உதாரணம் தந்து விளக்குக?

05. **என்னக் கேட்டு அவ் இரக்கம் இலாளையும்**
**தன் நல் கையின் வணங்கினன் தாய் என;**
**அன்னப் பேடை சிறை இலாது ஆய்க்கரை**
**துன்னிற்று என்னவும் வந்தது, தோணியே**

அ. குகன் கைகேயியை வணங்கிய தன்மை யாது?

ஆ. இப் பாடலில் உள்ள அணி யாது?

## இ பகுதி

01. குகப்படலத்தில், பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை அல்லது பரதனுக்கு கோசலை மீது உள்ள மதிப்பு காட்டப்படும் விதத்தினை எடுத்துரைக்குக?

02. குகப்படலத்தில், பரதன் சுமித்திரையை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை அல்லது சுமித்திரை இலக்குவன் ஆகியோரது புகழ் எடுத்துக்காட்டப்படும் தன்மையினை எழுதுகு.

03 .குகப்படலத்தில், பரதன் கைகேயியை குகனுக்கு அறிமுகம் செய்யும் தன்மையினை அல்லது கைகேகி மீது கொண்டுள்ள துயரம் கலந்த வெறுப்பு காட்டப்படும் விதத்தினை எழுதுக.

04. குகப்படலத்தில், கோசலையின் சிறப்புக்கள் குணப்பண்புகள் பற்றி எடுத்துரைக்குக?

05. குகப்படலத்தில் குகனின் சிறப்பு, குணப்பண்புகள் என்பன வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?

06. குகப்படலத்தில், பரதனின் சிறப்பு, குணப்பண்புகளை தெளிவுறுத்துக?

07. குகப் படலத்தில் கைகேயியின் கொடுமை எவ்வாறு காட்டப்படுகின்றது?